# மே - 15 - திங்கள்
## புனித இசிதோர்

**நம் கடவுளோ விண்ணலகில் உள்ளார்: தம் திருவுளப்படி அனைத்தையும் செய்கின்றார்: திபா. 115:3**

### முதல் வாசகம் : திருத்தூதர் பணி 14 : 5 – 18

அக்காலத்தில், பிற இனத்தாரும் யூதரும் தம் தலைவர்க ளுடன் சேர்ந்து திருத்தூதரை இழிவுபடுத்தி, கல்லால் எறியத் திட்டமிட்டனர். இதை அவர்கள் அறிந்து லிக்கவோனி யாவிலுள்ள நகரங்களான லிஸ்திராவுக்கும் தெருபைக்கும் அவற்றின் சுற்றுப்புறங்களுக்கும் தப்பிச் சென்றார்கள். அங்கெல்லாம் அவர்கள் நற்செய்தியை அறிவித்தார்கள். லிஸ்திராவில் கால் வழங்காத ஒருவர் இருந்தார். பிறவிலேயே கால் ஊனமுற்றிருந்த அவர் ஒருபோதும் நடந்ததில்லை. அவர் அமர்ந்து பவுல் பேசியதைக் கேட்டுக்கொண்டிருந்தார். அவரிடம் நலம் பெறுவதற்கான நம்பிக்கை இருப்பதைக் கண்டு பவுல் அவரை உற்றுப்பார்த்து உரத்த குரலில், ”நீர் எழுந்து காலூன்றி நேராக நில்லும்” என்றார். அவர் துள்ளி எழுந்து நடக்கத் தொடங்கினார். பவுல் செய்ததைக் கூட்டத்தினர் கண்டு லிக்கவோனிய மொழியில், ”தெய்வங்கள் மனித உருவில் நம்மிடம் இறங்கி வந்திருக்கின்றன” என்று குரலெழுப்பிக் கூறினர். அவர்கள் பர்னபாவைச் ”சேயுசு” என்றும், அங்குப் பவுலே பேசியபடியால் அவரை ”எர்மசு” என்றும் அழைத்தார்கள். நகருக்கு எதிரிலுள்ள சேயுசு கோவில் அர்ச்சகர் காளைகளையும் பூமாலைகளையும் கோவில் வாயிலுக்குக் கொண்டு வந்து கூட்டத்தினருடன் சேர்ந்து பலியிட விரும்பினார். இதைக் கேள்வியுற்ற திருத்தூதர் பர்னபாவும் பவுலும் தங்கள் மேலுடைகளைக் கிழித்துக்கொண்டு கூட்டத்துக்குள் பாய்ந்து சென்று உரக்கக் கூறியது: ”மனிதர்களே, ஏன் இவ்வாறு செய்கிறீர்கள்? நாங்களும் உங்களைப் போன்ற மனிதர்கள்தாம் நீங்கள் இந்தப் பயனற்ற பொருள்களை விட்டுவிட்டு, விண்ணையும் மண்ணையும் கடலையும் அவற்றிலுள்ள அனைத்தையும் உண்டாக்கிய வாழும் கடவுளிடம் திரும்புங்கள் என்ற நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறோம். கடந்த காலங்களில் அவர் அனைத்து மக்களினங்களையும் அவரவர் வழிகளில் நடக்கும்படி விட்டியிருந்தார். என்றாலும் அவர் தம்மைப் பற்றிய சான்று எதுவும் இல்லாதவாறு விட்டுவிடவில்லை. ஏனெனில் அவர் நன்மைகள் பல செய்கிறார் வானிலிருந்து உங்களுக்கு மழையைக் கொடுக்கிறார் வளமிக்க பருவ காலங்களைத் தருகிறார் நிறைவாக உணவளித்து உங்கள் உள்ளங்களை மகிழ்ச்சி பொங்கச் செய்கிறார்.” இவற்றை அவர்கள் சொன்னபின்பு கூட்டத்தினர் தங்களுக்குப் பலியிடுவதை ஒருவாறு தடுக்க முடிந்தது.

**பதில்பாடல் :** எங்களுக்கன்று ஆண்டவரே மாட்சியை உம் பெயருக்கே உரித்தாக்கும்

### நற்செய்தி : யோவான் 14 : 21 – 26

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:, “என் கட்டளைகளை ஏற்றுக் கடைப்பிடிப்பவர் என்மீது அன்பு கொண்டுள்ளார். என்மீது அன்பு கொள்பவர்மீது தந்தையும் அன்பு கொள்வார். நானும் அவர் மீது அன்பு கொண்டு அவருக்கு என்னை வெளிப்படுத்துவேன். ” யூதா - இஸ்காரியோத்து யூதாசு அல்ல, மற்றவர் - அவரிடம், ”ஆண்டவரே, நீர் உம்மை உலகிற்கு வெளிப்படுத்தாமல் எங்களுக்கு வெளிப்படுத்தப் போவதாகச் சொல்கிறீரே, ஏன்?” என்று கேட்டார். அதற்கு இயேசு பின்வருமாறு கூறினார் ”என்மீது அன்பு கொண்டுள்ளவர் நான் சொல்வதைக் கடைப்பிடிப்பார். என் தந்தையும் அவர்மீது அன்பு கொள்வார். நாங்கள் அவரிடம் வந்து அவருடன் குடிகொள்வோம். என்மீது அன்பு கொண்டிராதவர் நான் சொல்வதைக் கடைப்பிடிப்பதில்லை. நீங்கள் கேட்கும் வார்த்தைகள் என்னுடையவை அல்ல் அவை என்னை அனுப்பிய தந்தையுடையவை. உங்களோடு இருக்கும்போதே இவற்றையெல்லாம் உங்களிடம் சொல்லி விட்டேன். என்பெயரால் தந்தை அனுப்பப் போகிற தூய ஆவியாராம் துணையாளர் உங்களுக்கு அனைத்தையும் கற்றுத் தருவார் நான் கூறிய அனைத்தையும் உங்களுக்கு நினைவூட்டு வார்‘‘ என்றார்.

**தியானம்:** இன்றைய தியான வாசகங்கள் இறைவன் எம்மேல் கொண்டுள்ள அன்பினால் பலவிதமான நன்மைகளைச் செய்திருக்கின்றார். அவர் செய்த நன்மைகளுக்கு நன்றி கூற வேண்டுமென்றும், அவர் எவ்வாறாக எம்மேல் அன்பு கொண்டாரோ அதேபோன்று நாங்களும் ஒருவரை ஒருவர் அன்பு செய்து வாழ எங்களைத் தயார்படுத்த வேண்டுமென்றும் கூறுகின்றது. உலகிலேயே தலைசிறந்தது அன்பு ஒன்றே. அவ் அன்புக் கட்டளையைக் கடைப்பிடித்து வாழ்வோமானால் அவர் எங்களை விட்டு பிரிந்து போகாமல் தூய ஆவியார் எங்கள் கூடவே இருந்து வழிநடத்துவார் (யோவா.15:25). இவ்வாறு தூய ஆவியானவரின் வழிநடத்தல் எம்மத்தியில் காணப்பட வேண்டுமாயின் நாங்கள் அன்பு கொண்டவர்களாக வாழ்கின்றோமா என்று சிந்திக்க வேண்டியவர்களா உள்ளோம். அன்று வீதியில் குற்றுயிராய் கிடந்தவரை அவர் மேல் கொண்ட அன்பின் நிமித்தமே அவருக்கு உதவி செய்தார். இவ்வாறான மனநிலையுடன் நாங்கள் வாழ்கின்றோமா? இல்லவே இல்லை, மாறாக நான், எது குடும்பம் மட்டும் வாழ்ந்தால் போதும், உதவி செய்வதற்கு நேரமில்லை எனக்கு வேலை இருக்கின்றது என்று பல காரணங்களைக் காட்டி வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். ஆனால் நீ மற்றவர்களுக்குச் செய்வதெல்லாம் எனக்கே செய்கிறாய் என்று இயேசு கூறுகின்றார். எனவே இவ் இறைவார்த்தைக்கு இணங்க நாங்கள் ஒரே குடும்பம் அனைவரும் சகோதர, சகோதரிகள் என்ற உணர்வுடன் ஒருவரை ஒருவர் அன்பு கொண்டு பகிர்ந்து வாழ்வோம்